உ
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்,
மெச்சினா னுளும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-௵ சித்திரை-௴ 1926-௵ ஏப்ரில்-௴ { பகுதி 4.

கடவுள் வணக்கப் பயன்.

அடிநடு முடிவிலான் அடியிணை வணங்கின்
ஆழ்கருத் திலகும் சூழ்நலம் பலுகும்.
இன்புறு முறையும் துன்பறு துறையும்
ஈவும் இரக்கமும் மேவும். மெய், உயிர் பொருள்
உண்மையின் அளிக்குந் திண்மையும் வாய்ந்திடும்.
ஊரெலாம் வாழும். சீரெலாம் சேரும்.
எங்கும் மகிழ்ச்சியே பொங்கி விளங்கும்.
ஏக்கம் குலைந்திடும். தூக்கம் தொலைந்திடும்.
ஐயந் திரிபறும். மெய்யுணர் வொளியுறும்.
ஒற்றுமை ஓங்கும். வெற்றுரை நீங்கும்.
ஓடித் திரிஉளம் பீடுற நிலைபெறும்.
ஔவியம் முதலிய வெவ்வினை ஒழியும்.
கல்வி அறிவு செல்வநன் னடைமிகும்.
அரியனவாகிய உரிமைகள் வாய்த்திடும்.
நாடும் உய்ந்திடும். வீடும் எய்திடும்.
ஆதலின் போற்றுவம் அவனடி யிணையே.

R. S. கங்கா ஜடேச சர்மா.
'ஸமரஸ குடீரம்', இலந்துறை.

மகா பாரதம்.

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

வில்லிபாரதம்.

இனி, நாம் கூறுது விட்ட வில்லிபுத்தூரார் வரலாற்றையும், அவர் இயற்றி யுபகரித்த பாரதப்பெருநூலையும் பற்றிய முக்கிய விஷயங்களையும், இயன்ற அளவில் சுருக்கமாகக் கூறுவாம்: நவநாகரிகர்களான பிறநாட்டாரைப் போன்று, நம்மவர் தேச சரித்திரங்களையும் பழைய புலவர் பெருமக்கள் வரலாறுகளையும் எழுதி வைத்திலாக் குறையால், அவர்களுடைய காலம், அருஞ்செய்கைகள் முதலியன நாம் எளிதில் உணர இயலவில்லை. பிற்காலத்தவராகிய வில்லிபுத்தூரார் வரலாறும் 'இன்னதுதான்' என்று துணிந்து கூற முடியாமலிருக்கிறது. இது செவிவழி நிலைச் செய்தியிற் பல் வேறு வகைப்பட்டு வழங்குகின்றது. கட்டுக்கதைகளோ, ஆதாரமன்றிக் கர்ணபரம்பரையாய்க் கிடைத்த விஷயங்களோ, சரித்திரம் ஆகா. எனினும், இவர் புதல்வர் வரந்தருவார் என்னும் புலவர், இவரது நூற்குக் கூறிய சிறப்புப்பாயிரத்தால், இவர் செய்திகள் சில புலனாகின்றமையின், அவற்றை முன்னர் நோக்கிக் கோடல் பயனுடைத்தாம்:

இவர் பெண்ணையாற்றூன் வளம்படுக்கப் பெற்ற திருமுனைப்பாடி நன்னாட்டின ரென்பதும், பிராமண வருணத்தின ரென்பதும்,

> "பெண்ணை மாநதி நறநெய்பால் பெருகுமப் பழனப்
> பண்ணை நீள்வளம் பல்குசேர்ப் பழையநன் னாட்டில்
> வண்ண நான்கினும் உயர்ந்துளோன் ஒரு முனி வந்தான்"

என்ற சிறப்புப்பாயிரம் 14-ஆவது செய்யுட் பகுதியால் அறியலாகும்.

இவர் 'கவிதா சார்வ பௌமர்' என்பதும், திருமால் வழிபாட்டிற் சிறந்தோர் என்பதும், அக்கடவுள் மாட்டுப் பலகவிதைகளை முன்னரியற்றி, அடியவர் பலராலும் நன்குமதிக்கப்பட்டவரென்பதும், தமிழ் நாட்டு மன்னர் மூவர்பாலும் பல வரிசை பெற்று உயர்ந்தாரென்பதும், அச்சிறப்புப் பாயிரத்துள் 15, 16, ஆம் செய்யுட்களால் அறிக.

இவர் 'சனியூர் வீரராகவாசாரியார் புதல்வர்' என்பது 17-ஆவது செய்யுளில்,

> "தார காயண வண்டலைதண்டலைச் சனியூர்
> வீர ராகவன் அருள்பெரு வில்லிபுத் தூரன்"

என்பதனுல் அறியப்படுகின்றது.

இச் சனியூர் திருமுனைப்பாடி நாட்டின்கண் யாண்டுள்ளதென அறியக்கூடவில்லை. பலர் பலவாறு கூறுப. இனிச்சிலர், "வீரராகவன் அருள்பெறு வில்லிபுத்தூரான்' எனக்குறித்தமையின், 'அவ்வீரராகவாசாரியார், இவர்க்கு வித்யாகுரு' என்பர், மாணாக்கன் ஆசிரியர்க்கு ஞானபுத்திரன் எனப்படுதல் உண்மையால். இதன் உண்மை ஆராயற்பாற்று. இச்சனியூர் பாண்டிநாட்டதெனச் சிலர் கூறுவது பொருந்தாமை சிறப்புப்பாயிரக் கவிகளை உய்த்துணரின் புலப்படும்.

இவர் இங்ஙனம் பெரும் புலவராகிய இசை, திசையெலாம் பரந்துநின்றகாலை, இந்நாட்டில், கொங்கர்குலத்தவனாய் "வரபதியாட்கொண்டான்" என்னும் வள்ளல்தோன்றி, முச்சங்கத் தண்டமிழ் நூல் கலங்காமலும், கருநடப்பேர்வெள்ளத்து வீழமாலும், நான்காம் சங்கமொன்று நிலையிட்டன னென்றும், அவன் சோழமன்னவன் பகைவனாய பாண்டியனைச்செற்று, அவனுக்கு முடிகவித்து, இந்நாட்டிற் செங்கோன்மையினை நிலையிட்டனனென்றும், அவன் 'வக்கப்பாகை' என்னும் ஊரின்கண் வதிந்தவனென்றும். அவனே சனியூர் வாழ் வில்லிபுத்தூரரை நோக்கி, "நீயும் நானும், பிறந்ததிசைக் கிசைநிற்பப் பாரதமாம் பெருங்கதையைத் தமிழ் மொழியில் விருத்தத் தாற்செய்க என்றான்" என்றும், அச்சிறப்புப் பாயிரத்து 18-ஆவது முதலிய செய்யுட்கள் உணர்த்துகின்றன. இப்பாயிரத்தின் இறுதிச் செய்யுள், வில்லிபுத்தூரார் அங்ஙனமே பாரதத்தைப்பாடி முடித்து அரங்கேற்றுங்காலை, பெருக்காளர் முதலிய பெருங்குணத்தோர் இதனைக் கேட்டனரென்றும், அவர் புதல்வராய வரந்தருவார் இப்பாயிரத்தைக் கூறினரென்றும், தெரிவிக்கின்றது இத்துணையே அதனால் நாம் அறிந்து கோடற்குரியது.

இனி, இவ் வரபதியாட்கொண்டான் என்னும் தமிழ் வள்ளலின் முன்னோர்கள் கொங்கு நாட்டினரென்பதும், இவன் இந்நூலைப் பாடுவித்தவன் என்பதும், கன்னடர்ச் செற்றவனென்பதும், சோழன் சேனாபதி என்பதும்,

> "துன்னும் மறைப்பொருளெல்லாம் பொதிந்து சுவைமுதிர்ந்து
> பன்னும் புகழ்பெறைந் தாம்வேதம் என்னும் பாரதத்தைத்
> தென்னன் மொழியிற் சொலச்செய்து கன்னடர்ச் செற்றதமிழ்
> மன்னன் வலியனாட் கொண்டான் முன்னோர் கொங்கு மண்டலமே"

என்னும் கொங்குமண்டல சதகச் செய்யுளாலறியலாம். இச்சிறப்புப் பாயிரச்செய்யுட் செய்திகளும் இச்செய்யுட் செய்திகளும் ஒத்திருப்ப துணர்ந்துகொள்க.

இனி இரட்டையர்கள் எனப் பெயர் சிறந்த புலவர்களும் இவ் ஆட்கொண்டான் என்னும் வள்ளலைப்பாடிய,

சாணர்க்கு முன்னிற்கும் ஆட்கொண்ட நாயகன் தமிழ்க்கொங்கர்கோன்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே
ஊணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி உயர்வானிலே
வீணுக்கு நின்னுகம் மெலிகின்ற தெவ்வாறு வெண்டிங்களே?"

என்னும் பாட்டுத் தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுதல் கொண்டு, இவன், மேற்கூறிய வக்கப்பாகை வள்ளல் என்பதும், இவர்களும் இவர்கள் காலத்தவராகிய காளமேகப்புலவரும் இவ் வில்புலித்தூரார் காலத்தவரொன அறியலாகும். இவ் வக்கப்பாகை, தொண்டைநாட்டுச் சிவ தலமாகிய திருவக்கரையேயாம் என்று கூறுவர்,

இனி, வில்லிபுத்தூரார் அருந்தமிழ் ஆராய்ச்சி வன்மையும் வடசொற்களையும் வடசொற்றொடர்களையும் திரித்தும் மொழிபெயர்த்து வழங்குந்தன்மையும், பலசந்தச் செய்யுட்டிறமையும், தம்மை யாதரித்தார்பால் நன்றி அறிவும், தம் நாடு, மொழி, இவற்றின்பாற் பக்தியும், அவர்கள் திருமொழிகளைப் போற்றுந் தகைமையும், பிற உயர்குணங்களும் உடைய ரென்பது, இந்நூலிற் பலவிடத்தும் அறிஞர்கள் கண்டு இன்புறலாகும்.

இவரது தனி வடமொழிப் பிரயோகங்கள் எடுத்துக் காட்டாமலே விளங்கக்கூடியவை. வடசொற்களை இவர் தொடர்மொழியாகப் பிரயோகித்தமைக்குச் 'சலதா சஞ்சல சாலம்', 'கபோல விகட கடகரி துரகம் பதாதி யிரதம்' முதலியனவும், மொழி பெயர்த்தமைக்கு 'அம்மனை, 'உள்ளமானதேர்' முதலியனவும்; சிதைத்து உபயோகப்படுத்தற்கு 'இயமதங்கி' 'அச்சிரம்' 'குதிரைத்தாமா' முதலியனவும், உதாரணங்களாம்.

தம்மை ஆதரித்துக் காத்த பிரபுக்களைக் கம்பர், புகழேந்தியார், மண்டல புருடனூர், முதலியோர் முறையே தாம் இயற்றிய இராமாயணத்தும், நளவெண்பாவிலும், சூடாமணி நிகண்டிலும், உரியவிடங்களிற் சிறப்பித்துக் கூறியதுபோல் வில்லிபுத்தூராரும் தம்மையாதரித்த வள்ளலின் வீரத்தையும் கொடைத்திறத்தையும் தமது பெருங்காப்பியத்தில் இடையிடையே புகழ்ந்து கூறுகிறூர். உதாரணமாக, காண்டவதகனச் சருக்கம் 50-ஆவது செய்யுளில்,

"சொன்மழை பொழிந்து காடொறுந் தனது
தோள்வலி நுதிக்கும் நாவலர்க்குப்
பொன்மழை பொழியும் கொஙகர் பூபதி"

என்றும், பதினேழாம் போர்ச்சருக்கம் 33-ஆவது செய்யுளில்,

"கோவல்சூழ் பெண்ணை நாடன் கொங்கர்கோன் பாகை வேந்தன்
பாவலர் மாலைக் காத்தான் பங்கயச் செங்கை யன்ன"

என்றும்; பதினூறும் போர்ச்சருக்கம் 90-ஆவது செய்யுளில்,

"நாகையாப் புகழான் பெண்ணை நதிவளம் சுரக்கு நாடன்
வாகையாற பொலிதிண் டோளான் மாகதக் கொங்கர்கோமான்
பாகையாட் கொண்டான் செங்கை பரிசுபெற் றவர்நெஞ் சென்ன"

என்றும் அவர் அவனது கொடைத்திறனையும்; விராடபருவம் நிரை மீட்சிச் சருக்கம் 104-ஆவது செய்யுளில்,

"கொடிமதிற் பாகை வேந்தன் கொங்கர்கோன் புரவிக் காலால்
வடநிலச அரசர் தங்கள் மாமணி மகுடம்போல"

என்று அவனது வீரத்தையும் அவர் பாராட்டிக் கூறியதுணர்க.

தமிழ்நாட்டு மூவரசர் பெருமைகளையும் இவர் மனமாரப் பாராட்டியுள்ள உண்மை, குறைந்தது பத்து இடங்களிலேனும் காணலாம். இவரது தேசாபிமானத்தையும் பாஷாபிமானத்தையும் பற்பல செய்யுட்களில் ஆங்காங்குக் கண்டு தெளிக.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

பெஞ்சமின் பிராங்க்லின்.
Benjamin Franklin.

அத்தியாயம் 4.

நம்பி ஏமாறல்.

"செயக்கடவ அல்லனவும் செய்தும்மன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னும்—'செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம்' என்று தலைதுமிப்பான் தண்ணளிபோல்
எஞ்சா(து) எடுத்துரைக்கற் பாற்று"—குமரகுருபரர்.

முந்திய அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நிகழும் சமையம் பெஞ்சமின், தன்னை மேன்மேலும் உற்சாகப்படுத்திவந்த கவர்னரை அடிக்கடி பார்த்துவந்தான். அவர் இவனுடைய பிதா பணங்கொடாமற் போனபோதிலும், தாம் கட்டாயம் பணங்கொடுத் துதவுவதாகச் சொல்லி, றவனுக்கு நம்பிக்கை வரச்செய்தார். அச்சுக் கூடத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கிவருவதற்கு அவனையே நேராக இங்கிலாந்துக்கே அனுப்புவதாகவும் சொல்லிவந்தார்.

பின், அங்கு என்ன சாமான்கள் வாங்கவேணடுமென்பதற்கும், அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமென்பதற்கும், ஒரு குறிப்புத் தயாரிக்கச் சொன்னர். அன்றியும் இச் சமாசாரத்தை ஒருவரிடமும் சொல்லாமலிருக்குமாறும் கட்டளையிட்டார்.

அந்தோ! பெஞ்சமின் இவரை முற்றிலும் நம்பினான். இவருக்குப் 'பேச்சு சர்க்கரை. கை கரணை' என்பதையும், இவர் வாக்களிப்பதில் வல்லவரே ஒழிய அதனை நிறைவேற்றுவதே கிடையாதென்பதையும் பெஞ்சமின் அறியான். தமக்குள் நிகழ்ந்த விஷயம் பரம ரகசியமாய் இருக்கவேண்டுமென்று இவர் விரும்பியதால், இவர் கூறியவற்றைப் பிறரிடம் தெரிவித்து, இவரைப்பற்றிய உண்மை இயல்பறிய பெஞ்சமினுக்கு மார்க்கமில்லாமற் போய்விட்டது. 'வெளுத்ததெல்லாம் பால்' எனக்கொண்ட பெஞ்சமின் அவரை முற்றிலும் நம்பினான்.

கவர்னரின் வெற்றுரை இவற்றுடனும் நிற்கவில்லை. அவர், இங்கிலாந்தில் இருக்கும் தம் சிநேகர்களுக்குச் 'சிபார்சு'க் கடிதம் பெஞ்சமினுக்குத் தருவதாகவும், மற்றும் அச்சு யந்திரம் அச்சுகள் காகிதம் முதலியன கடனாக வாங்கிவருவதற்கும், இங்கிலாந்திலுள்ள வியாபாரி ஒருவருக்குக் கடிதம் தருவதாகவும் சொல்லியிருந்தார். இக் கடிதங்களைப்பெறப் பெஞ்சமின் கவர்னரிடம் பன்முறை சென்றும், அவர் 'பின்னே ஆகட்டும்' 'நாளைக்கு ஆகட்டும்' என்று காலந் தாழ்த்தி வரலானார்.

இங்கிலாந்துக்குக் கப்பல் புறப்படும் நாளும் வந்தது. அன்று பெஞ்சமின் கவர்னரிடம் சென்றான். அவரை நேரில் பார்க்கமுடியவில்லை. அவருடைய வேலையாள், கவர்னர் அதிக அவசரமான நிருபங்கள் எழுதிக்கொண்டிருப்பதாகவும், அவனை அவர் நியூகாஸிலில் (New Castle) என்ற ஊரில் சந்திப்பாரென்றும் தெரிவித்தான். கப்பல் நியூகாஸிலில் வந்துசேர்ந்தது. அங்கு, கவர்னரை அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த பெஞ்சமினிடம் கவர்னருடைய வேலையாள் வந்து, அவர் அதிக அவசரமான ஒரு வேலையில் கவனம் செலுத்திக்கொண்டிருப்பதாகவும், அவர் காகிதங்களைக் கப்பல் புறப்படுவதன்முன், கப்பல் தலைவனுக்கு அனுப்பிவிடுவாரென்றும் தெரிவித்தான்.

வேலைக்காரன் அறிவித்தவாறே சிறிது நேரத்திற்குப்பின் கவர்னரிடமிருந்து ஒரு பெரிய தபாற்பை வந்தது. கப்பலும் புறப்பட்டது. தன் விலாசத்திற்குக் கவர்னர் எழுதிய காகிதங்களைக் கொடுக்க வேண்டுமென்று, பெஞ்சமின், கப்பல் தலைவனைக் கேட்க, அவன், வெகுநாழிகை காக்க வைத்து, பிறகு பையைச் சோதித்து, முடிவில், 'உமக்கு ஒரு கடிதமும் இல்லை' என்று தெரிவித்துவிட்டான்.

தான் கனவிலும் எதிர்பாராத இந்தப் பதிலைப் பெஞ்சமின் கேட்டவுடன் இடியேறுண்டவன்போல் திகைத்து நின்றான். இச்

சமயம் இவனுடன் அமெரிக்கா தேசத்திலிருந்து இங்கிலாந்துக்குக் கப்பற் பிரயாணஞ் செய்த டேன்ஹாம் (Denham) என்பவருடன் இவன் சம்பாஷித்தபோது தன் நிலைமையை அவருக்கு அறிவித்தான். அது கேட்ட அவர், அவனுக்கு இரங்கியதுடன், கவர்னர் ஒரு 'வீணுரையாளர்' என்ற விஷயத்தைத் தாம் அனுபவ பூர்வமாய் அறிந்ததைக் கொண்டு விளக்கிக்காட்டினர். பெஞ்சமின் தான் 'மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய'தை நினைத்து மனங்கலங்கினன். பின்பு, அவன் சென்றதை நினைத்து வருந்தாமல், மேல் நடக்க வேண்டியதை யோசிக்க ஆரம்பித்தான்.

இப்பொழுது டேன்ஹாம் என்பவர், பெஞ்சமினை இங்கிலாந்தில் ஒரு அச்சுக்கூடத்தில் வேலைக்கமர வேண்டுமென்றும், அங்ஙனம் செய்தால்தான் அவனுக்குக் காலக்ஷேபத்திற்குப் போதிய பணமும், திரும்பி ஊருக்குச் செல்லப் பிரயாணச் செலவிற்குப் போதுமான தொகையும் கிடைக்குமென்று சென்னர்.

அவரது நல்போசனைக்கிணங்க, அவன் இங்கிலாந்து வந்ததும், அநேகம்பேர் வேலைசெய்துவந்த ஒருபெரிய அச்சுக்கூடத்தில் வேலைக்கமர்ந்தான். அதில் வேலை செய்து வந்த அநேகர் குடியர்களாயிருந்தனர். 'உடல் வருந்த உழைப்போர் கட்டாயம் குடித்தே தீரவேண்டும்' என்னும் எண்ணமுடையோர் அவர்கள்.

ஆனல் பெஞ்சமின் சுத்த நீரைத்தவிர வேறுபானம் செய்வதில்லை. அப்படி இருந்தும் அவன் அவர்களைப் பார்க்கிலும் அதிகக் கடினமான வேலைசெய்ததுடன் பணத்தையும் மீத்து வந்தான். இவனது அருஞ்செயல்களைக் கண்ட அவர்களில் அநேகர் குடியை அறவே யொழித்தனர்.

பெஞ்சமின் அநேக புஸ்தகங்களைப் படிப்பதிலும், கற்றுணர்ந்தோரிடம் கேட்பதிலும் தன் ஓழிவுநேரத்தைக் கழித்தான். இவ்வாறு பதினெட்டு மாதங்கள் கழிந்தன. பின் இவனுடன் இங்கிலாந்துக்கு வந்த டென்ஹாம் பிடல்பியா செல்ல உத்தேசித்தார். அவர் ஒரு பெரிய வியாபாரி. தம்மிடம் வேலைபார்த்தால் வருஷத்துக்கு 250 'டாலர்'கள் தருவதாகச் சொல்ல, பெஞ்சமினும் ஒப்புக்கொண்டான். இருவரும் கப்பலேறிப் பிலடல்பியா வந்துசேர்ந்தனர்.

(தொடரும்)

P. சுந்தரராஜையங்கார் B. A.
சரித்திராசிரியர், விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலை.

விநோதக் கூற்று.

குழவி விற்போன்:—கொளவி வாங்கலியோ கொளவி, கொளவி!
சேஷி:—(வேலைக்காரியை நோக்கி) மாரி. கூப்பிடு! கூப்பிடு!! அதுக்கு ஏதோதோ அலங்காரமும் பண்ணி இருக்குடி.
மாரி:—(வெளியேவந்து திரும்பி) காணுங்களே!
சேஷி:— பெரிய வீட்டிலே நொழஞ்சிருப்பான் பாரு.

இப் 'பெரிய வீடு' ஒரு 'செந்தமிழ்'ப் புலவராது. இப் புலவருக்குத் தந்தையா ரிட்டபெயர் 'பாலசுந்திரம்' என்பது. தம் தாய் தந்தையர் தமிழராய் இருந்தும், அவர்கள் தமக்குக் கேவலம் வடமொழிப் பெயர் இட்டமைக்கு வருந்தி, 'இளவழகு' என்று தம் பெயரைத் திருத்திக்கொண்டவர். திரிசொற்களே 'செந்தமிழ்'ச் சொற்கள் என எண்ணுவதும், அவற்றையே பெரும்பாலும் வழங்கி இடர்ப்படுவதும் இவருடைய இயல்பு. சிவபக்திமிக்குடைய இவர், "பெரும்புத்தேள்! பெரும்புத்தேள்!!" என்று ஜபித்துக்கொண் டிருக்கையில், இவரிடம் வந்து,

மாரி:—அம்ப வீட்டுக்குள்ளே, கொளவி நொளஞ்சிச்சாமே?
இளவழகு—என்ன? குளவியா? குளவியும் நுழைந்திலது. ஞிமிறும் நுழைந்திலது.
பக்கத்திருந்தோன்:-(சிரித்து) புலவீர்! 'குளவி' அன்று 'குழவி'.
இளவழகு:—ஓ! ஓ!! குழவியா? அஃதும் இவண் போந்திலது.
மாரி:----இங்குதானே நொளஞ்சானும், அதுக்கு அலங்காரங்கூட நல்லாச் செஞ்சிருந்திச்சாம். அதுக்காக ஜில்லெ ஆத்திரப்பட்டு அம்மாங்க வெறட்டு வெறட்டுன்னு வெறட்டினுக-
இளவழகு:-(சினந்தும், பதறியும்) வம்பி! யாம் அணிகவர் கொலைஞர் கொல்? குழவியைக் கோறல்செய்ய யாம்வந்தியர் கொல்?, அணிவிழைஃ துய்தற்கு ஆதுலர்கொல். ஞரேலெனக் காவனிலயம் புக்கு, ஆண்டுளார்க்கு உணர்த்துக. பல்லோர் முன்னிலையில் எம்மைப் பரிபவப்படுத்தினையால் மான இழவிற்கு வழக்குத் தொடர்வல்.

அரும்பத விளக்கம்:—இள அழகு-பால சுந்திரம்; திரிசொற்கள்-எளிதில் பொருள் விளங்காச் சொற்கள். பெரும் புத்தேள்!-பெரும்புத்தேள்!!-மகாதேவ! மகாதேவ!! ஞிமிறு - வண்டு. போந்திலது-புகவில்லை.-இவண்-இவ்விடம்; அணி கவர் கொலைஞன் கொல்?—நகைகளைத்திருடும் கொலை பாதகனு?கோறல் செய்ய-கொல்ல, வந்தியர்-மலடர்; அணி விழைந் துய்தற்கு-நகைக் காசைப்பட்டு வயிறு வளர்த்தற்கு; ஆதுலர்-தரித்திரர். ஞரேலென-சரேலென்று. காவினிலயம்புக்கு-போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய்; பரிபவம்-அவமானம் (இஃதொரு வடமொழிச் சொல்.) மான இழவு-மான நஷ்டம்.]

T. S. ஜெம்புநாதன்.

சேரமான் பெருமாள் நாயனார்.

கொடுங்கோளூர்ச் சிறப்பு:- புண்ணிய பூமியாகிய இப் பரத கண்டத்து, தமிழ் நாடுகளில் ஒன்றும் மிகுந்த பழைமையினை யுடைய சேரநாடு, திருமகள் தங்கும் தெய்வபூமியா யிருந்தது.

ஒருகாலத்து, அதற்குத் தலைநகராய்க்§கொடுங்கோளூர் என்ற தொரு தொல்பதியைச் சேரர் பெற்றுச் செங்கோல் செலுத்திவந் தனர். அவ்வூரைச் சிரிய கூரிய தீஞ்சொற் கவிஞரனைவரும் பல படித்தாகப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். அதன் பெருமையைச் சுருக் கிச் சொல்லின்,

*"இந்நகர் நோக்குந் தோறும் இமையவர் தமது நாடு
நன்னரென் றிருந்த தம்மைத் தாங்களே நாணி வைவர்.
முன்னொரு சமயந்தன்னைப் பொருளென முற்றி நின்றோர்
பின்னர்வான் சைவ மெய்தப் பெறினவர் பேசு மாபோல்"

என்று அதன் சிறப்பை யொருவாறு எடுத்துரைக்கலாம்.

அம் மூதூரில், எங்கும் பல்கலை பயில்வோர் ஆர்ப்பும், யானைக் கன்றுகள் பிளிறு மொலியும், சோலை வண்டுகளின் ரீங்காரமும், குதி ரைகள், மிகுந்த செருக்குடன் சுற்றிவரும் ஐவகை வட்டத்தின் ஒலி யும், பாலைபாழ் மீட்டுவோரின் இசையும், பாடலாடல்களின் முழக்க மும், முழவின் சப்தமும், தனித்தனி சமுத்திர கோஷத்தினும் மிக்கோங்கி விளங்கும்.

அங்கு, வீடுகளில் என்றும் இன்பமே யொழியத் துன்பமில்லை. அறச்சாலைகளில் திட்டமான தருமம் நிலை பெற்றிருத்தலன்றி அதர் மம் என்பது சிறிதேனும் கலப்பில்லை. அழகிய மடங்கள்தோறும் சைவசமயம் தழைத்து ஓங்கியது.

'வேத நெறியின் முறைபிறழா மிக்க வொழுக்கந் தலைநின்ற
சாதி நான்கும் நிலைதழைக்குந் தன்மைத் தாகித் தடமதில்சூழ்
†சூத வகுள சரளநிரை துதையுஞ் சோலை வளநகர் தான்
கோதை யரசர் 'மகோதை'யெனக் குலவு பெயரு முடைத்துலகில்.'

---

§ கொடுங்கோளூர்—இது வஞ்சிமாநகருக்கு அருகிலுள்ளது. செங் குன்றென்னும் மலையைப் பக்கத்திலுடையது. இதனை அடியார்க்கு நல் லார் சிலப்பதிகாரப் பதிகத்திற்கு எழுதிய முரையாலுணர்க. * காஞ்சிப் புராணம்

† சூதம்வகுளம் சாளம் நிரை—மா, மகிழ், என்ற மரங்களின் ஒழுங்கான வரிசை.

இத்தகைய, அந்தணர் முதலிய நான்கு வருணத்தவரும் தம் முறை பிறழாது நீதி மார்க்கத்தில் நின்ற, அக்கொடுங்கோளூர், 'கோதை' வம்சத்தவர்களுக்கு உரித்தாதல் பற்றிப்போலும், மற்றொரு பெயர் பெற்றதென யாவரு மெண்ணுமாறு 'மகோதை,' எனவும் பிரசித்தமாய் வழங்கப்பெற்று வந்தது.

பெருமாக் கோதையார் திரு அவதாரம்:-'மகோதை' யென்னும் பெயரையுடைய இக்கொடுங்கோளூரிலே, கலிப்பகை கெடவும், சைவசமயம் தழைத்தோங்கவும், பலவுலகங்களுள் பூலோகமும், அப்பூலோகத்துள் தமிழ்நாடும், அத்தமிழ்நாட்டுள் சேரநாடும் சிறக்கவும், சேர குலத்தவரும் இந் நிலவுலகத்தவரும் செய்த தவத்தால், அச்சேரர் குடியிலே, சிவபெருமான் திருவருளால் ஒரு சற்புத்திரர் அவதரித்தார். அவருக்கு அங்குள்ள சான்றோர் 'பெருமாக்கோதையார்' என நாமகரணம் செய்தார். அவர்க்குச் சாதகர்மம், அன்னப்பிராசனம் என்கின்ற செய்யவேண்டிய கர்மங்கள், உரிய காலங்களில் மிக்க சிறப்போடு செய்யப்பட்டன.

இப்பெரியார் அவதரித்ததும், இவரது திரு அவதாரச் சிறப்பால் அந்நகரத்துள்ளோர் யாவரும், ஆனந்த வெள்ளத்தில் அழுந்தினராய்த் தாமே புத்திரப்பே றடைந்ததென வுட்கொண்டு, நெய்யாடல் செய்தனர். மங்கல ஒலி அந்நகரெங்கும் எழுந்தது. தேவர்கள் கற்பகப் பூமாரி பொழிந்தனர்.

பெருமாக்கோதையார் சிவானுபூதிச் செல்வராதல்—இவர் சிறு பிராயத்திற்றானே, முற் பிறப்பிற் செய்த சிவபூஜா புண்ணிய விசேடத்தால் நிஷ்காரணமாக மண்ணில், பெண்ணில், பொன்னில், தன்னில் கொள்ளும் ஆசைகளாகிய அகப்பற்று புறப்பற்றுக்கள் முழுதுமற்றுப் பரந்த சீவான்மாக்களெல்லாம் சிவபிரானின் அடிமைகள் என்பதும், உண்டாகிய எவ்வகைப்பட்ட பொருள்களும் அவனுடைய பொருள்களென்பதும் நன்குணர்ந்தார்.

இவ்வுணர்ச்சி காரணமாக, இப் பெரியாருக்குச் சிறிதேனும், அரசிளங்குமாருக்குரிய தொழில்களில் மனம் செல்லவில்லை. ஆதலால் அவர் தம் ஊரைவிட் டகன்றார்; சேர நாட்டில், சிறந்த பாடல் பெற்ற ஸ்தலமாகிய திருஅஞ்சைக் களத்தையடைந்தார். அங்கே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள பரமகாருண்ய மூர்த்தியாகிய சிவபெருமானைத் தரிசித்தார். தரிசித்ததும், அந்த மூர்த்தியினிடத்து ஈடுபட்டார். அவர், தினந்தோறும் வைகறையிலெழுந்து ஸ்நானம் செய்வார். தம் கர்மாநுட்டானங்களைச் சிரத்தையுடன் செய்து முடிப்பார். பிறகு, தம் கையாலமைத்த திரு நந்தனவனத்திற் சென்று, பூஜாருகமான புஷ்பங்களை, சித்தத்தைச் சிவன் பாலிருத்தி, கொய்ய வேண்டிய முறைப்படி கொய்வார். அவற்றைக்

கொண்டு திருமாலை தொடுப்பார். மற்றும், வேண்டிய பூஜா திரவியங்களைச் சேகரிப்பார். திருக்கோயிலை யணுகுவார். திருவலகிட்டுத் திருமெழுக்கிடுவார். பின்னர் திருந்த சிவபூஜை செய்து, கடவுள் திருமுன் நின்று, கைகள் தலைமேற்குவிய, இரு கண்களினின்றும் நீர் வழிய, மயிர்க்குச்செறிய, சுடுதழல்வாய்ப் பட்ட அரக்கென மனம் கனியுருகி யிளக, நாத்தழும்ப,

*"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றிச் சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்! என்னைக் கண்டுகொள்ளே."

*"தொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு. குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால். நரகம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே."

என்ற இத்திறத்த பாடல்களைப்பாடிக் கடவுளைத் துதித்துப் பரவசமாய் நிற்பார். இஃதிங் கிவ்வாறாக.

செங்கோற் பொறையர் துறவறம்:—கொடிமதில் சூழ்ந்த கொடுங்கோளூரிலே, காசின்மலிந்த கொடை நிழல்மேல், கவிக்கும் கொற்றக்குடை நிழல்செய்ய, மன்னுயிர் தம்மைத் தம்முயிர்போலப் பேணித் "திருவுடைமன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்னும் பொது வசனத்தைத் தனக்கென்று சொல்லப்பட்ட சிறப்பு வசனமாக்கொண்டு, அரசர்க்குரிய நற்குண நற்செய்கைகளெல்லாம் தம்மிடத்து இனிது வாய்க்கப்பெற்றுச் செங்கோல் செலுத்திவந்த செங்கோற்பொறையர் என்னு மகாராஜர், ஒருநாள்,

†"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற் பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேபறி வாரில்லையே"

என்ற ஆன்றோர் அமுதத் திருவாக்கின் கருத்திற் கிணங்க, "எத்திறத்து மகுடவர்த்தனர்களும் முடிவில் இறப்பது திண்ணம்" என்பதை நினைவிற்குக் கொண்டுவந்தார். எவ்வளவு புத்திமான்களுக்கும் எளிதில் வாரா இவ்வுணர்ச்சி பொறையர்க்கு வந்தது, அவர் முற்பிறப்பிற் செய்த நல்வினைப்பயனே யாகும்.

இவ் வுணர்ச்சியடியாக, 'இவ்வுலகத்தில் எல்லாம் அநித்யம்' என்பதை அவருணர்ந்தார். இருவகைப் பற்றுமற்றார். சொர்க்காதி போகங்களில் வெறுப்புற்றார். நித்தியமாகிய மோக்ஷானந்தத்தில்

* திருவாசகம் † பட்டினத்தடிகள்

விருப்புற்றார். ஆதலின் அவர் பிறவிப்பிணிக்குக் காரணமாகிய வீண் முயற்சிகளை விட்டு, பேரின்ப வீட்டைப் பெறுவதற்கேற்ற யோகசாதனங்களைத் தேர்ந்தார். உடனே அரசியலைத் துறந்து, அடவியுள் மறைந்து தவநிலையை மேற்கொண்டார்.

அமைச்சர் பெருமாக்கோதையாரை அணுகல்:-செங்கோற் பொறையர் அறக்கள வேள்வி செய்ய அருங்கானடைந்ததும், குடிகள் கொற்றவனின்றி அற வருந்திச் செயற்பால திதுவெனத் தெரியாமல் மறுக்கமுற்றனர், மந்திரிமார்கள் சின்னாள் தீர்க்காலோசனை செய்து, கடைசியாகத் திருஅஞ்சைக்களத்துச் சிவபெருமான் திருத்தொண்டு செய்துகொண்டு காலம் கடத்திவருகின்ற, சேரர் மரபிற்குத் திலகம் போல் விளங்கும் பெருமாக்கோதையாரிடத்துச் சென்று, இது விஷயமாக இரந்து நிற்றலே தகுதி யுடைத்தென்று தெளிந்து நின்று, "சேரர் குலசேகர! நும் குல திலகரான செங்கோற் பொறையர் நாடு துறந்து காடு சென்றார். ஆதலால், இனி, முறைப்படி நீரே முடிசூடி இம் மலைநாட்டை அரசியற்றல் வேண்டும்" என்று விண்ணப்பம் செய்து,

† "வாழியெங்கோ! மன்னவர் பெருந்தகை
ஊழிதோறூழி யுலகம் காக்க" —

எனப் போற்றி நின்றார்.

பெருமாக்கோதையார் அரசிய லேற்றல்:— இச்சொற்கள் விண்ணவர் பதத்தையும் வெறுத்து, சிவநேசச்செல்வராய் விளங்கும் கோதையாருக்குக் கர்னகடூரமாயிருந்தன. உடனே, அவர், திருக்கோயிலுட் சென்று, அங்கு நின்று சிறிது ஆலோசிக்கலாயினர்; "இவ்வரசாட்சியை வேண்டாமென்று சொல்வோமாயின், அரசனின்றி நாடு என்னாகும்? மேலும், அதனால் வரும் பாபமும் நம்மைச் சாருமன்றோ! என்செய்வது? அன்றி நாடாட்சியை யேற்றுக்கொள்வோமெனில் சிவபக்தியிலே சிறிதும் வழுவாது அரசியற்றும் திருவருளுமுளதாமோ? அவ்விதமுளதாயின், எம்பெருமானிடத்து விண்ணப்பம்செய்து நின்று அதனை யறிவோம்" எனத் தம்முள் நிச்சயித்து, சிவபெருமானை யணைந்து,

* "அணைதொறுஞ் சிறக்கும் அமுதே! போற்றி.
இணைபிறி தில்லா ஈச! போற்றி.
ஆர்வஞ் செய்பவர்க் கனியோய்! போற்றி.
தீர்வி லின்சுவைத் தேனே! போற்றி.
வஞ்சனை மாந்தரை மறந்தோய்! போற்றி.
நஞ்சினை யமிர்தா நயந்தோய்! போற்றி."

† மணிமேகலை, * பட்டினத்தடிகள்.

என இவைபோன்ற அவ்வீசருடைய பல சிறப்புக்களையும் சொல்லித் துதித்து, "இறைவே! செங்கோல் செலுத்துமரசன் தன் குடிகட்கு நிகழ்வன எவற்றினையும் தானே நேரிற்கண்டுணர்தல் கூடாமையின், ஒற்றர்களான் ஆங்காங்கு நிகழும் விடயங்களைக்கேட்டு, பின்னர் அவர்களையும் நம்பானாய்த் தானே 'மாறுவேடமுற்று, ஒளித்திருந்து ஓர்வேன்' எனக்கொண்டு, நள்ளிருளில் நகரி சோதனைவந்து அவற்றை யறிவான். சிலவிடங்களில் இவ்விதம் நகரிசோதனை வந்து பார்த்தும், உண்மை தெரிகிலனாய்த் தவிப்பான். இவ்விதம் மிகவும் சவனமாய் அரசியற்றுவதில், அணுவளவேனும் அவன் தவறின், அருநா கடைவனன்றோ? காவலன்றொழிலும் கண்ணும்பொத்தியோ? ஆதலால் எளியேன் இவ் வரசாட்சியை எவ்விதம் கைக்கொள்வல்? குடிகள் தம் சொற்சாதுரியத்தால் மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் செய்துவிடுவரே!. அந்தோ! என்செய்வல்! அன்றியும், அநுதினமும் யான் நும்பாற் கொண்டொழுகும் அன்பிற்கும் இஃதோரிடை யூறாகுமே!" என அறிவித்து வருந்தி நின்றார்.

உடனே, "குடிகள் ஆங்காங்குப் பேசுவன யாவும் நீயிருந்த விடத்திற்றானே, உணருமா றருளினும், அரசாட்சியைக் கொள்க.' எனக் கடவுள் திருவருள் புரிந்தார். இது காரணமாக நம் பெருமாக் கோதையாருக்குக் "கழறிற்றறிவார்" என மற்றொரு பெயர் நன்றாக வாய்ந்தது.

இவ்விதம், முதல்வர் திருவருளால், எங்கும் யாவரும் கழறினவைகள் யாவையுமறியும் அறிவு வாய்ந்ததுமட்டுமன்றி, அவரிடத்தே வைத்த பத்தியகலாது அரசியற்றும் ஆற்றலும், அழியாப் பெருவிறலும், தடையில்லாக் கொடையும், அரசனுக்குரிய படை வாகன முதலிய பல வளங்களும், இனிதில் கைவரப்பெற்று, நமஸ்கரித்துக் கொண்டு, திருக்கோயிலின்புறம் போந்து, மந்திரிமார்களுடைய வேண்டுகோளுக் குடன்பட்டனர். அமைச்சர்களும் அடங்காப் பேரின்பமடைந்து, அவரை வணங்கி நின்றார்

(இன்னும் வரும்)

S. சீதாராமையர்,
Tamil Pandit, National College High School, Trichy,

அதிகாரத்தினை அல்வழிச் செலுத்தல்.

[ஷேக்ஸ்பியர் கவி இயற்றிய "Measure for Measure" என்ற நாடகத்துள்ள ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பு.]

நீதித் தீர்ப்பு நிகழ்த்திடும் பாமன்
நீயுள வாறே நினைநிர் ணயித்து
நியாயந் தீர்ப்பின் நின்நிலை யாதாம்?
அரக்கனின் வலிமை அடைதல்நன் றேனும், அவ்
அரக்கனைப் போலவே அதைக் கையாளுதல்
கொடுமை யேயாம். *கோபதி போன்றே
'பெரிய' மனிதரும் பேரிடி வீழ்த்தின், அவ்
இறைவன் சும்மா இரானொரு போதும்.
ஏனெனில், வருத்தும் இயல்பினையுடைய
ஒவ்வோர் அற்ப உத்யோ கஸ்தனும்
இடியெறி வதில்,—இடி யெறிவதில் தான், தன்
உயரிய பதவியை உபயோ கிக்கிறான்.
கருணா கர! நின் கருக்குள கந்தக
இடியே(று) ஆப்புக் கிடந்தா துள்ள
கணுக்கள் வாய்ந்த கடின சிந்துரத்
தருக்களைத் தாக்கித் தகர்த்திடு மல்லால்,
சந்தன மென்தரு தமைத்தாக் காதே.
மனிதனே—செருக்குறு மனிதனே—சின்னாள்
அற்ப அதிகா ரத்தினை அணிந்து, தன்
ஊன உடலை உறுதியென் றன்னலே
உறுமதி யீனமென் றுணரா னாகி,
உன்னதக் கடவுளின் முன்னிலை தானே
அமரர் கணத்தையும் அழச்செயும் விதமாக்
கோப மேறிய குரங்கினைப் போன்று
குதிகுதித் தாடிக் கோரணி செய்கிறான்.
நமது பித்(து)அவ் அமரருக் குளதேல்,
செத்தே போவர் சிரித்துச் சிரித்தே.

* கோபதி—இடிக்குத் தலைவன்: விண்ணவர்கோன்: (Jove.)

ம, கோபாலகிருஷ்ணன்

ABUSE OF AUTHORITY.

[From "*Measure For Measure*" Act II. Scene 2]

How would you be,
If He, which is the top of judgment should
But judge you as you are?......
Oh it is excellent
To have a giant's strength ; but it is tyrannous
To use it like a giant.......
Could great men thunder
As Jove himself does, Jove would ne'er be quiet ;
For every pelting petty officer
Would use his heaven for thunder,
Nothing but thunder. Merciful Heaven!
Thou rather, with Thy sharp and sulphurous bolt
Split'st the unwedgeable and gnarled oak
Than the soft myrtle; but man, proud man,
Dressed in a little brief authority,
Most ignorant of what he's most assured,
His glassy essence,—like an angry ape,
Plays such fantastic tricks before high heaven,
As make the angels weep, who, with our spleens,
Would all themselves laugh mortal.

—WILLIAM SHAKESPEARE.

பாரத பாத்திரங்கள்.

பாரதபாத்திரங்களைப்பற்றிய ஆராய்ச்சி ஒன்றை எழுதி வெளியிட வேண்டுமென்ற ஆவல் அடியேனுக்குப் பன்னாட்களாக உண்டு. கடவுட் டன்மை பெரிதும் வாய்ந்த வியாச மகா கவியால் இயற்றப்பெற்றதும், 'மோக்ஷ சாதன' மென்று அறிஞர்களால் போற்றப்படுவதுமான 'ஐந்தாவது வேதம்' என்ற மாண்புடைப் பெயர் தாங்கிய இந்த இதிஹாஸ பாத்திரங்களைப்பற்றி விமர்சனம் செய்ய, அறிவு, ஆற்றல், அனுபவம், நூலாராய்ச்சி முதலியன சிறிதுமில்லாத என்போலியர் எவ்வாற்றானும் ஏற்றவரல்ல. ஆயினும் இத்தகைய விஷயங்களில் அடியேனுக்குள்ள போாவலும் குணக்குன்றாகிய பெரியோர் குற்றங்களைந்து குணத்தைமட்டும் கொண்டு எளியேனது ஊக்கத்தை மேன்மேலும் விர்த்திசெய்வார்களென்ற நம்பிக்கையுமே இதை எழுதத் தூண்டின.

இந்த மகா காவியத்தை எதற்கும் லக்ஷணக் கிரந்தமாகக்கொள்வது தவறாகாது. மனித சமூகத்தில் காணப்படுகிற பன்னூறுவித வேற்றுமை விசேஷங்களையும் பாரதத்திற் பரக்கக் காணலாம். ஒன்றோடொன்று முரண்பட்ட கொள்கைகள், குணங்கள், தத்துவங்கள் முதலியன தமக்குள் ஊடாடிப் பெரும்போர் விளைத்தலை இதில் கவனிக்கலாம்.

சுக துக்கங்கள் சான்றோர் மனத்தில் எவ்வித மாறுதல்களையும் உண்டாக்கும் வல்லமை அற்றன என்பதும்; தூய்மையுடையோர் இடுக்கண் ஏற்படினும் தம் குணம் குன்றார் என்பதும்; செல்வம், சேனை முதலியன புல்லர்தம் கைப்படின், அவர்களை அதிபாதாளத்தில் அழுத்திவிட்டே அவை அவரைவிட்டு அகலுமென்பதும்; சத்தியமும் சாந்தமும் எப்படியும் இறுதியில் வெல்லுமென்பதும்; இழிதொழில் இருமையும் கெடுக்குமென்பதும்; கொடிய பகையுடையரேனும் இரத்தசம்பந்தம், அவரைத் தன்புறத்த நேரும்பொழுது ஒருவரைக் கூடச்செய்யும் என்பதும்; மனிதன் எதையும் சுயமாகச் செய்ய வல்லவன் அல்லன் என்பதும்; விதியின் வலிமையும்; மற்றும் பலவும் இந்நெடுங் கதையில் விஸ்தாரமாக விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இன்னும் இக்கதையில் பேசப்படாத விஷயம் ஒன்றையும் உலகில் நாம் காணமுடியாது. தகப்பனை உதாசிக்கும் ஒரு கொடிய குமாரன் வேண்டுமா? பெற்றோரைப்பேணும் பணிவுடைய உத்தம மைந்தர் வேண்டுமா? அவர்களைப் பாரதத்திற் பார்க்கலாம். தர்மந் தவறிய தார்வேந்தன் போகுங்கதியென்ன? கடவுளை நம்பிக் கஷ்டத்திற்குட்படும் நற்குண மாந்தர் பெறும் வெகுமதியென்ன? இவை

களையும் நாம் இப் பெரிய கதையில் காணலாம். பேராசை பேராபத்து என்பதைக் காட்டும் நிகழ்ச்சிகளும் இதில் நிறைந்துள்ளன. என்ன என்ன சம்பவங்களையும், விஷயங்களையும் உலகில் நடைபெற நாம் காண்கின்றோமோ அவைகள் அனைத்தையும் இந்த ஆதி நூலில் மிகத்தெளிவாகக் கண்டு தெளியலாம்.

மேலும் இந்நூல் விஷயம் நிகழ்ந்த காலத்திய நம் தேச நிலைமையும் நன்றாகத் தெரிந்துகொள்ளக்கூடும். அக்காலத்தில் மாந்தருக்கிருந்த தர்ம சிந்தையும், அற ஒழுக்கமும் அரசியலைப்பற்றிய அவர்கள் அபிப்பிராயமும், மன்னர் மாநிலந்தாங்கிய முறையும், பொருள் நிலை அபிவிர்த்தியும் இன்னும் இவைபோன்ற பிறவும் சற்றுக் கவனத்துடன் ஆழ்ந்துநோக்குபவர்க்குப் புலப்படும்.

அளவில், பாரதத்தை மீறிய நூல் இவ்வுலகில் எந்தப் பாஷையினும் இதுவரை இயற்றப்பெறவில்லை என்பது அறிஞர் அனைவரும் அறிந்ததொன்று. இப் பெருங் கதை நிகழ்ச்சிக்குக் காரணபூதர்களான கதாபாத்திரங்களின் தொகையோ எண்ணிக்கை அற்றது. யாரைப்பற்றி முதற்கண் விசாரிப்பது என்ற சங்கையே எனக்கு அடிக்கடி தோன்றிக்கொண்டிருந்திடுவது. பீஷ்மனின் உறுதியும், யுதிஷ்டிரனின் தூய்மையும், அர்ச்சுனனின் வீரமும், கர்ணனின் கொடையும், சுயோதனனின் கொடுமையும், சகுனியின் வஞ்சகமும் சகாதேவனின் தயாளமும் பக்ஷபாதமின்மையும், விகர்ணனின் தர்ம உணர்ச்சியும், விதுரனின் உள்ள நெகிழ்ச்சியும், திரௌபதையின் ஹிருதய சுத்தமும், கண்ணன் அகடவிகட லீலா விநோதங்களும், என்முன் உருப்பெற்று எழுந்துநின்று, யாரைப்பற்றிக்கூறத் துவக்குவது என்ற முடிவுக்குவா முடியாதபடி என் மனத்தை ஸ்தம்பிக்கசெய்துவிடுகின்றன.

மேற்கூறியவற்றுள் ஏதேனுமொன்றே தனிப்பெரு நூலாக அமையப் போதுமானது பாரத கதையின் நிகழ்ச்சியில் தோன்றும் புருஷர்களைக்குறித்து எனது அபிப்பிராயம் எழுதப் புகுங்கால், அறிஞருக்கு ஓர் விஞ்ஞாபனம். எனது எண்ணங்கள் ஒருக்கால் இதுவரை சாதாரணமாகக்கருதப்பட்டுவருகிற வழக்கத்திற்கு மாறாகத் தோன்றலாம். அதையே ஒரு காரணமாகக்கொண்டு என்னை விலக்காதிருக்குமாறு ஓர் வேண்டுகோள்.

பாரத கதாபாத்திரங்கள் பல இருப்பினும், என் மனதைக் கவர்ந்தவை மூன்று பெயர்கள் ஆகும். அவர்களாவார்: பிதாவின் திருப்திக்காக சுயநலம் வெறுத்த பீஷ்மனும், தமக்குப் பெருந்தீங்கு விளைவதாயினும், உண்மையன்றி வேறுரைக்க அறியாத சகாதேவனும், எத்தகைய கஷ்டநிலைமையினும் பிறர் கேட்டதை 'இல்லை' யென்று சொல்லாத கர்ணனுமே. (தொடரும்.)

ஸ்ரீபார்த்தஸகன், திருச்சி,

உ

பராந்தகன்.

நான்காம் காட்சி.

காலம்:—இரவு 8 மணி.

இடம்:—கள்வர் வீடு.

பாத்திரங்கள்;—கறுப்பன், வீரன், அமாவாசை, இருளன், முனியன், மாயாண்டி, பேச்சி முதலியோர்,

[கறுப்பன் கதவைத் தட்டப் பேச்சி திறந்து, கள்வர் யாவரையும் உள்ளே அழைத்துச் செல்லுகிருள். வீரன் மாயாண்டிக்கு நிகழ்ந்தனகூறி அவனை அழைத்துவரச் செல்லுகிருன்]

பேச்சி:–(யாவரும் நுழைந்து ஓரிடத்தில் உட்கார்ந்ததும்) காயா? பளமா?

கறு:—காயு மில்லெ, பளமு மில்லெ.

பேச்சி:—அப்படிண்டா?

அமா:—ஆளெயே கொண்டாந்துட்டம்.

பேச்சி:—அம்பிட்டுக் கிறும்பு செய்தபய ஆரு? எங்கே, அவன் மொகரக்கட்டெயெப் பார்ப்பம்.

இருளன்:—நல்லாப்பாரு ஆத்தா! நல்லாப்பாரு.

[விகார பயங்கரமுகங் காட்டுகிருன்]

பேச்சி:—(திடுக்கிட்டு) இதென்ன பேயெயில்லெ ஏமாந்து கூட்டியாந்திட்டீக போலிருக்கு. ஆத்தே! பயந்தில்லே போய்ட்டேன். இந்தச் சனியெ இங்கேயா கூட்டியாரணும்? அங்கேயே வேலெயைச் சாச்சுப்போட்டுடக் கூடாது?

கறு:—அப்படித்தான் செய்யாதுண்டு போனோம். பய வளிக்கு வந்துட்டானில்லெ?

அமா:—இந்தப் பயமட்டும் நமக்குத் தனதா இருந்தா, எம்புட்டோ லாவந்தான் நமக்கு.

பேச்சி:—என்ன லெச்சணம்! வெடியாலே எந்திருச்சு இவன் மூஞ்சிலே முளிச்சாலே நல்ல வரும்படி கிடைச்சுப் போகும்.

இருளன்:—வம்படி கிடைக்கவேண்டியவகளுக்கு வரும்படி என்னாத் துக்கு இங்கிரியாக்கும்? நீ சொல்றதும் சரிதான் ஆத்தா.

பேச்சி:—சீ! இந்தச் சனியனை எங்கே புடிச்சிக? அவுக வந்ததுடனே எங்கேனச்சும் அடிச்சு வெறட்டணுங்கரேன். அதிகப் பேச்சுப் படிக்கிற மூதேவி நமக்கு ஆகாது.

[இருளன் அதி பயங்கரமாக விழிக்கப் பேச்சி அஞ்சுகிறாள். மாயாண்டி முதலிய யாவரும் வருகிறார்கள்]

மாயா:—இவனா? (இருளனை நோக்கி) ஏ! என்னசொல்றெ? சொன்ன படி கேட்டுக்கிட்டு துரோகஞ் செய்யாமெ நீ சரியா நடக்கணுமே?

இருளன்:—என்ன, இப்படிக்கேக்கறீங்க? மனிசனுக்குச் சொன்ன ஒரு சொல்லில்லே?

மாயா:—இல்லெ—நீ துரோகம் பண்றேன்னு வச்சுக்குவமே ஒரு பேச்சுக்கு.

இருளன்:—அப்போ, நானென்ன ஓடியா போய்ட்டேன்? மனிச னுடைய ரோக்கியதெயெப் போகப் போகல்லே பார்க்கணும்? அப்பொ எனக்குத் தப்ப வழிபேது? உங்க கத்தி மொட்டையாவா போயிடும்? நீங்க அம்புட்டுப் பேர்களுஞ் சும்மாவா விட்டுடுவீங்க?

மயா:—ஆமா, பார்த்துக்கோ, ஓம்பேரிலே இம்புட்டுச் சமுசிய நாச்சும் இருந்திச்சோ, போச்சு உன் உசிரு, எங்கே வேணுமிண் டாலும் ஓடித் தப்பிச்சுப்பாரு. அங்கெல்லாம் வருவம். ஆகாயத் திலே பற. பூமிக்குள்ளே ஒளிஞ்சுக்கோ. போலீசு புலிகளுக்கு நடுவுலெதான் இரு. இரும்புக் கோட்டைக்குள்ளேதான் பூந் துக்கோ. அப்பவும் ஓன் உசிரு உன்னுதில்லே. ஓன்னெக் கொன்னே போட்டிடுவோம். கள்ளங்களிலே நாங்க கொலகா ரங்க இங்கிரது நாவகத்திலே இருக்கட்டும். ஆம்மா.

இருளன்:—நான் என்ன பச்சப்புள்ளயா? ஒங்க சாமார்த்தியந் தெரியாது?—பசிக்குது, சோறுகொண்டாரச் சொல்லுமொதல்லே.

மாயா:—சரி, அதிருக்கட்டும். கறுப்பனை அப்படியா அடிச்சுத் தள்றது? என்னாத்துக்கு அடிச்சே? செசத்தைச் சொல்லு.

இருளன்:—என்னனுச்சுங் கெடைக்காதா இண்டுதான்.

மாயா:—என்ன கெடைச்சுச்சு?

இருளன்:—அந்த வயத்தெறிச்சலெக் கேக்காதே, படுபாவிப் பய அந்தத் தனபாலன், அவன் உசுரைக் காப்பாத்தியும், அந்தப்பய கா்காசுகூடத் தரல்லே.

கறு:—இந்தா, நெசமாத்தானா?

இருளன்:—என் வயத்தெரிச்சலெக் கௌப்பாதே. ஒண்ணுங் குடுக்காததோடே நானும் நீயும் கூட்டுக்களவாணி இண்டு காத்தி மகன் என்னெச் சுடஇல்லெ போய்ட்டான்.

மாயா:– ஒனக்கு வேணும் அது. அப்பறம்?

இருளன்:—அப்பறம் என்ன? நல்லத்துக்குக் காலமில்லியே. தட்டி விட்டேன் துப்பாக்கியெ. பய ஓடியே போய்ட்டான். கொஞ்ச நாளிகெ மட்டும் இருந்தா, பய படறபாடு வேறே. வேறே ஆளுக வந்துட்டாங்க. அதினாலில்லே உசிரு பொளச்சான். ஆனா அண்ணே! ஒண்ணு சொல்ரேன். அவன் இனிமேத் தப்பரதேது?

மாயா:—நெசமாத்தானா?

இருளன்:—என்னண்ணே! இப்படிக் கேக்கறெ?

மாயா:—ஏது எனக்குத் தோணல்லே. அவனெப் புடிச்ச பிசாசு கூட இனிமே உங்கிட்ட வராது. எத்தனெ நாளா அவனெ நாங்க தேடித்திரியுரோங் தெரியுமா? அவன் வெளியிலே ஒண்டி சண்டியா வாரதில்லே. வந்தா ஏமாளிப் பயலாய் வரமாட்டான். ஆளுக தொணையும் ஆயுதமுமில்லாமே பொறப்பட மாட்டான்.

இருளன்:—அந்தப் பயலில்லே, அம்பது பேர்தான் வரட்டும். அஞ்சு இரும்புச்சட்டை போட்டுகிட்டுத்தான் வரட்டும். ஒருதரங் கண்டுகிட்டேனா தொலஞ்சான் அவன் அத்தோடே. இந்தக் கண்ணு இருக்குதெ, இது, கண்டு பிடிக்காத ஆளுகளும் ரகஸியங்களுமில்லே. ஒத்தெக்கண்ணு எனக்குப் பொட்டையாயிருந்தாலும், இந்த ஒருகண்ணுக்குச் செவாப்புச் சொல்ல ஒருத்தராலேயும் முடியாது.

மாயா:—அப்படியா? அப்ப எங்க வேலே கொஞ்சம் சல்லிசாப் போச்சுன்னு சொல்லு.

இருளன்:—எப்படி?

மாயா:—தனபாலன் எங்களுக்கு ஒரு காரியத்திலே ஆகாத பயலானுன். அவனே இப்போ ஒனக்கும் ஆகாதவனாயிட்டான் பாரு.

இருளன்:—அந்தப்பய மட்டுமா? இனிமே ஒங்களுக்காகாத எந்தப் பயகளும் எனக்கும் ஆகாத பயகதான். நாளைக்கே தொலைச்சுப் போட்டேன் அவனை—அதிருக்கட்டும். என்ன நச்சு நச்சுனு பேச்சு—சோறெங்கே? பசி துடிக்குது. சோத்தெக்கண்டு நாள போடே நாள் ரெண்டாகப்போகுது.

மாயா:—சோத்துக்கா பஞ்சம்? ஏ! குட்டி, பேச்சி! உண்டெனச் சோறுபோடு இவனுக்கு. எம்புட்டுத்தான் திங்கான் பார்ப்போம். பொறுக்கத் தின்னப்பா-போ.

[பேச்சியும் இருளனும் போகிறார்கள்.]

இருளனைப் பாத்தா ரோக்கியன் போலதான் இருக்குது. நீங்கென்ன நெனக்கறீங்க? அவனெ நம்மவச்சுப் பாக்கலாமா?

வீரன்:—நாம வச்சுக்கா போனாலும் அவன் எப்படியாவது பொளச்சிக்குவான். நமக்குத்தான் அவனைப் போல ஆளுக கெடக்காது.

கறு:—வீரன் சொல்றது ரொம்ப சரி. ஆத்தாடி! என்ன பலம்! என்ன சாமார்த்தியம்!

அமா:—இன்னிக்கு எவ்வளவோ வேசமாறிப் போயிருந்தும் கறுப்பனெ நேத்திவந்தவன் இண்டு எப்படியோ கண்டுக்கிட்டானே. பலே கோப்பனுக்குமவன். விட்டிடக்கூடா தவனை.

மாயா:—பாருங்க! நாமொண்ணுநெனக்க சாமி ஒண்ணு நெனச்சிச்சு. வலியவந்த சீதேவியெ காலாலொதச்சுத்தள்றது போலிருக்கும் நாம் அவனெ வாணுமிண்டா இண்டு தோணுச்சு. அதுக்குத் தான் ஒங்களைக் கேட்டேன்.

மூனி:—எப்போ அவன் தனபாலனெப் பகச்சானோ அதுக்காகவாவது நாம அவனெ வச்சிக்கவாணுமா? இருளன் நம்மொளொடே சேந்தானே, வாங்க. சந்தோசமா பாட்டுப் படிச்சுச் சாமியைக் கும்பிடுவோம்.

[யாவரும் பாடுகிறார்கள். பாடிமுடிந்தவுடன் இருளனும் பேச்சியும் வருகிறார்கள்]

இருளன்:—(ஏப்பம் விட்டுக்கொண்டு) அப்பாடா!

மாயா:—சாப்பிட்டியா நல்லா? (அவன் முகத்தைப் பார்த்து) கொலை செய்யவே ஒன்னை படைச்சிறுக்கான் சாமி இண்டு ஓம்

மூஞ்சியே சொல்லுது. இருக்கட்டும், ஏன் தம்பி! நிசமாச்சொல்லு. தூக்குக்குத் தப்பிச்சுகிட்டு எத்தனெ நாளா ஒளிஞ்சு திரியறெ?

வீரன்:—நீ எந்தச் செயிலிலிருந்து கடசியா தப்பிச்சு வந்தே? சாமி சாக்கியாச் சொல்லு.

இருளன்:—இது எத்தனே செயிலோ பாத்திருக்குது. இன்னும் எத்தனே செயிலோ பாக்கப் போகுது. அது கிடக்குன்னு.

பேச்சி:—மொகரையெப் பாரு: பச்செ யில்லெ குத்தி யிருக்குது. இவன் எந்தத் தீவாந்தரத்திலிருந்து ஓடியாந்துட்டானே? அமாவாசையை நோக்கி) எத்தனெதரம் இவனெத் தண்ணிமேலே ஏத்தியிருப்பாங்க?

இருளன்:—பார்த்தவங்க போலச் சரியாச் சொல்றீங்களே! ஓங்களுக்குச் சோசியம் கீசியந் தெரியுமோ? (தனக்குள்)-என் கதி இப்படியெல்லாம் ஆய்விட்டது. (வெளிப்படையாய்) அதிருக்கட்டும்—எனக்கு என்னு வேலே குடுக்கப்போறீக?

மாயா:—அவசரப்படாதே. சமயம் வாரபோது சொல்றேன். நான் சொல்றதைக்கேளு. இந்த ஊரிலேயே கொலேபாதகங்க அஞ்சு பேர் தான். ஏய்! அவுக ஆரு? இங்கிருக்கோமெ நாங்க அஞ்சு பேர்தான்.

இருளன்:—சரி.

மாயா:—நீ ஆறுவன்.—என்ன ரோசிக்கிறே?

இருளன்:—ஆறுபேருக்கு என்னவேலே இருக்கப்போறதிண்டுதான்.

மாயா:—வேலேயா? ரொம்ப இருக்குது. போகப் போகத் தெரியும் —எங்கபேரு தெரியுமா?

இருளன்—எனக்கு என்ன சோசியமா தெரியும்? சொல்லுங்க.

மாயா:—நான் தான் மாயாண்டி.

இருளன்:—சரி.

மாயா:—நேத்தி நீ கத்தியெத் தட்டிக் கீளே சாச்சேபாரு அவன் தான் கறுப்பன். அவனேடே கூட்டிக்கிட்டுவந்தஆள் அமாவாசை

இருளன்:—இவுங்க ரெண்டு பேருமில்லெ வந்தாங்க.

வீரன்:—நீ சொல்றது சரி. அவன் அமாவாசை, நான் வீரன்.

இருளன்:—(முனியனேக் காட்டி) இவன்?

மாயா:—இவன் முனியன்.

இருளன்:—நான்?

மாயா:—நீ இருளன்.

இருளன்:—இல்லெ. சந்தேகத்துக்கு கேட்டேன். இருக்கட்டும். இந்தக் குட்டி யாரு?

மாயா:—நம்ம குட்டிதான். நீ மட்டும் நல்ல ரோக்கியனு இருந்தால் இந்தக்குட்டி—அப்பறஞ் சொல்றேன்.

இருளன்:- குட்டி சமாசாரம் கிடக்கு. இப்பொ எனக்கு என்னு வேலே குடுக்கப்போறீங்க?

மாயா:—அதுக்குள்ளே 'வேலெ வேலெ' இண்டு பதர்றியே. ஒன் பலம் இன்னது, ஒன் சாமர்த்தியம் இப்படிப்பட்டது இண்டு தெரிஞ்சுகிட்டல்லெ அப்பறஞ் சொல்லனும்?

இருளன்:—என் இப்பவே நல்லா தெரிஞ்சுக்கிறதுதானே?

மாயா:—நீ சிலம்ப மடிப்பியா? குசுத்தி செய்வையா?

இருளன்:—ஆர்நாச்சும் வந்து பாருங்க. அப்போத் தெரியுது. ஆர் வாறீங்க? (முண்டாத் தட்டுகிறுன்)

மாயா:—(சிரித்துக் கொண்டே) கறுப்பனே அடிச்சுப் போட்டதனுலே ரொம்பப் பல சாலி இண்டு நெனச்சுக்கிடாதே. அவன் ரெண்டு மாசமாக் காச்சலாக் கிடந்தபய. அவன் பலம் எங்கேயோ போயிடுச்சு.

இருளன்:—அப்படியா? ஒங்களுக்குள்ளே ஆனேக்குட்டி பலம் ஆருக்கு? அவுக வரட்டும். அதுகூட வேண்டாம். எல்லாருமா சேந்து வந்து பாருங்க. ஒருகை நானும் பாக்கறேன்.

மாயா:—தலேகிளா விளாதே. மொதல்லே நான் வர்ரேன். அதிலிருந்து நாங்க எப்பேர்க்கொந்த ஆளுக இன்னு பாத்துக்க. என்டா பலே. நாங்க என்ன கையாலாகாதவங்களா? இல்லாட்டி ராசாவைச் சுத்திக்கிட்டே கிடக்கிற கம்மணுட்டிப் பயகளா? ஆரிட்ட இந்தப் பொட்டெ மெறட்டு? உசார்.

இருளன்:—அப்படியா? நீங்க அம்புட்டுப்பேரும் புலிக்குட்டிங்க இங்கிரது தெரியாது. என் தொண தொண இன்னு பேசிக்சிட்டிருக்கீங்க? என்கை இப்போ் குறுகுறுங்குது. எல்லோரும் வந்து பாருங்க, இப்ப வந்தாத்தான் வருவேன். அப்பறம் வரமாட்டேன், ஆமா.

மாயா:—பய வவுறு முட்டத்திண்டுட்டு வாயிலெ வந்தபடி பேத்தறான். வாங்கடா எல்லாரும். கொஞ்சும் சூடு காம்பிச்சு வப்பம்.

இருளன்:—அதான் சரி. அதான் சரி.

[முண்டாத்தட்டி வலக்கையால் வீரனையும் இடக்கையால் அமாவாசையையும் குத்தி, கறுப்பனை இடக்காலாலும் முனியனை வலக்காலாலும் உதைத்து வீழ்த்தி, மாயாண்டியைக் குண்டேக்கட்டாய்த் தூக்கி எறிகிறான்]

மாயா:—(ஊமைக்காய முற்ற இடங்களை அமுக்கிக் கொண்டு) சீ! வெளையாட்டுக்குச் சண்டெ போட்டா இப்படியா தூக்கி எறிபறது? கால் கை முறிஞ்சிடிச்சு போலிருக்கே. அப்பா! நீ சாமானியமானவனில்லெ. இனிமே ஒனக்குச் சொன்னபடி நாங்கதான் கேக்கணும். (பேச்சியை நோக்கி) இந்தா குட்டி! இனிமே பயலெ நல்லாகவனிச்சுக்க. அவன் நல்லா இருந்தாத்தான் நமக்கெல்லாங் கொறவில்லெ.

வீரன்:—(முழி பிசகிய தன்கையைப் பிடித்துக் கொண்டு) என்ன அண்ணே! இந்தப் போடு போட்டே பல்லுத்தெறிக்க களுதெ, ஒதஞ் சாப்போல.

முனியன்:—ஆத்தே! என்னவலி வலிக்குது! என்கை சுளுக்கிக்கிடுச்சே. (அமாவாசையை நோக்கி) பய தப்பிச்சுக்கிட்டேபோலிருக்கு?

அமா:—சீ! என்னடா விளையாட்டு? என்னமோ கிரக்கமா வாது எனக்கு. பேச்சி! கொஞ்சம் தண்ணி கொண்டா, (பேச்சி ஓடுகிறாள்)

கறு:—ஐயோ சாமி! இப்படியா என்னெ வச்சே? நேத்திக்கு இவங்கிட்ட பூசை. இன்னிக்கும் ஒதெ

இருளன்:—பரிச்சே போதுமா? இல்லெ, முக்காலெ மூணுவாட்டியும் வந்து பாக்றீங்களா?

மாயா:—இனிவாணும். நீ ஆளெ அடிச்சுச் சாமிக்குப் படக்கிறதாக நேந்துகிட்டு வந்திருக்கே. பரிச்செ போதும் போதும். கோளி கூப்பிட்டிடுச்சு. போதும் நல்லா விடிஞ்சிடிச்சு. வாங்க நல்லாத் தூங்குவம், ராத்திரி எங்களுக்கு வேலெயிருக்குது. நாளைக்கு ஒனக்கு ஏதாவது வேலைபாத்துத்தாரோம். அப்பறம் பேசிக்குவம். வாங்க. வாங்க. (யாவரும் செல்கின்றனர்)

(நான்காம் காட்சி முற்றிற்று.)

திருக்குடந்தை: ஆயக்கண்ணனார்.

உ

சிவமயம்.

போங்தும் மங்களம் எங்தும் தங்துக.

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி:

ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரிய

ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

திரிசிரபுரம் "நேசநல் காலேஜ்" என்ற தேசீய வித்யா சாலைக்கு
27—3—26ல் விஜயம் செய்த போது, அவ் வித்யாசாலையார்க்காக
அவர்கள் விருப்பிற் கிணங்க இயற்றி.
ஸ்வாமிகளின் திருவடிகளிற் சூட்டிய

வரவேற்புப் பாமாலை

பூமிசை 'கச் சியிற் காக்கை கரி'தென் னும்புகழ்வாய்ந்தபுனிதமான
காமருகாஞ் சிக்காம கோடிபீ டாதிபதிக் கண்யசிலப்
பாமிளிரும் பரமஜகத் குருஸ்ரீசங் கரபகவத் பாதா சார்ய
சாமி!இவண் நின்வரவு நல்வரவா குக.நின்சீர் தழைத்து வாழி!

['கச்சியிற் காக்கை கரிது'-இது ஔவை வாக்கு. இதில் 'கரிது' என்பதற்குக் 'கொடியது' என்பதுபொருள். "காக்கை" யொழிந்த யாவும் நல்லன; ஆதலின் யாவினும் சிறந்த மனிதரைப் பற்றிச்செல்லவேண் டியதில்லை:கச்சியைத் தலை நகராக்கொண்ட தொண்டை நன்னாடு 'சான்றோருடைத்து' என்று பொருள்படும்.

"காஞ்சி முத்திதரும் நகர் ஏழனுள் முதலாவது. நினைத்த மாத்திரத்தில் முத்தி யளிக்கவல்லது." என்பவற்றைப் "புனிதம்" என்பது உணர்த்தும்]

பொன்னகரும் பின்னகரும் இந்நகருக் கென் னுமெழில் பூண்டதாலே
என்னகர்க்கும்'தலைநக'ராம்சிரபுரநன்னகர்க்கணியாளரார்ந்தோங்கும்
தன்னிகர் இத் தேசீய கல்லூரி தனில்வந்த, சாந்தமூர்த்தி! [கேட்டி:
நின்னருகில் யாம் அன்பால் நின்றுரைக்கும் இம்மொழியை நேர்ந்து

[பின்னகரும்-பின் + நகரும்;பின் மெதுவாய் நழுவிச்செல்லும். என்னகர்க்கும்—என் + நகர்க்கும்; தன்னிகர்-தனக்குத்தானே ஒப்பான: நிகரற்ற.]

"என்றென்று தர்மம்தாழ் வுற்றதர்மம் ஏற்றமுறும் இப்பாரின்கண்,
அன்றன்று, தவறுமல் அவதரிப்பல் நல்லோருக் கருளுமாறும்
நன்றென்றும் அறியாத்தீ யோரைநலிந் தேஅறத்தை நாட்டுமாறும்"
என்றன்று கீதையிலே அருளியவா றவதரித்த எங்கள் தேவே!

[இப்பாட்டில் உள்ள முதல் மூன்று வரிகளும், "யதா யதா ஹிதர்மஸ்ய" என்று தொடங்கும் கீதா ஸ்லோக மொழி பெயர்ப்பு.]

[மேலோய்
வேந்தரெலாம் தலைவணங்கும் மேதக்கோனென யாண்டும் விளங்கும்
மாந்தரெலாம் பூஜிக்கும் மலரடியார் மாண்புடைய மாதவத்தோய்!
சாந்தரெலாம் அதிசயிக்கும் சாந்தவடி வுடைய 'ஸ்ரீ சந்த்ர சேக
ரேந்திர சரஸ்வதி'ப்பேர் வாய்ந்திலகு குருமணி! நீ என்றும் வாழி!
காவிரிக்கும் வளனுர்ந்த காவிரிபாய்திருக்குடந்தைக் கவினுர் எந்தாய்!
நாவிரிக்கும் பண்பார்இந் நகர்பயிலும் மாணவர்கள் நாத்தி கத்தை
மீவிரிக்கும் கலிகிலபம் சாராதே காத்திடும்இவ் வித்யா சாலை
பூவிரிக்கும்புகழார்நின் திருவடித்தாள்பெறுமிந்நாள்புனிதநாளே

[காவிரிக்கும்—சோலைகளைப் பரப்பும். பூவிரிக்கும்-பூமியோர் மிகுதியும் சொல்லும்; (பொலிவு செம்மை, லக்ஷ்மிகரம் முதலியன அமைந்த) தாமரை மலரின் இயலை மிகுதியாகக் காட்டும்],

வேறு.

மாறுபெற்ற மதங்களென மதிக்கப் பெற்ற
மதங்களைத்தன் மாமதியால் ஒருமை ஆக்கி
வீறுபெற்ற வித்தக! நின் அடித்தாள் இன்றிவ்
வித்தியா சாலையுற்று விளங்கும் மேலாம்
பேறுபெற்ற தாதலின், இன் னது மேன்மேலும்
பேரின்ப தத்துவங்கள் பிறங்கித் தோன்றும்
ஆறுபெற்றிவ் அவனிமிசை ஓங்கும் என்றற்
கறிகுறியாம் அணுவளவும் ஐயம் இன்றே.

வேறு.

வணமணியே! நவவசன வாமணியே! தவமணியே! மாசில் தொண்டர்
கணமணியே! கலைமணியே! கற்றவழி நிற்பதற்குக் காட்டாக் காட்டும்
குணமணியே! குருமணியே! நற்றவர் சிகாமணியே! கோதிலார்க்குப்
பணமணியே நிதமளிசிந் தாமணியே! நின்பெருமை பகரற் பாற்றே?

[பணமணியே-பணம் அணியே; பொருளும் தோடா முதலிய ஆபரண சம்மானங்களும்,]

பரஞானம் பரந்திலகும் புனிதமிகு மதிவலியும், பாரிற்காணும்
உருவுடைய நராதி உயிர்களெலாம் ஒருகுலமென்றுணரு முண்மைக்
கருணைமலி இருதய விசாலமும் சீலமும் பொறையும் கலைகள் யாவும்
திருமேனி படைத்துவந்த தெனயாரும் கொண்டாடும் திவ்யமூர்த்தி!

["பரஞானம்......மதிவலி"—ஸ்ரீமத் ஆதி சங்கரரது. "பாரிற்
காணும்......இருதய விசாலம்" ஸ்ரீமத் ராமானுஜர் முதலியோரது.]

நான்மறைதேர் நான்முகனும் நான்முகனே எனயாரும் நவிலுமாறும்,
தேன்மொழியார் நாமகளும் நாமகளே என அவளே செப்புமாறும்,
பான்மைமிகு மலைத்தவனும் மலைத்தவனே எனப்பார்த்தோர் பகருமாறும்
மேன்மைமிகு கம்பனுமோர் கம்பனே எனக்கண்டோர் விளம்புமாறும்

[நான்முகன்—பிரமதேவன்; (நாணத்தால்) தொங்கும் முக
முடையவன். நாமகள் சரஸ்வதி; 'நாம் (கேவலம்) மகள்'; மலை
த்தவன்-பொதியமலையில் எழுந்தருளியுள்ள அகஸ்திய முனிவன்;
பிரமித்து நின்றவன். கம்பன்—கல்விசான்ற கவி சக்ரவர்த்தி;
நடுக்கமுற்றவன் அல்லது கம்பம் போன்று நிற்பவன்.]

பெருமொழிசேர் கண்ணுதலே முதற்குரவர் ஆகுமொரு பெரும்பேறுற்ற
இருமொழியும், ஆங்கிலமும் தேர்ந்துணர்ந்த தீரனென இலகுநின்வாய்
வருமொழியின் பிரசங்கம் பொழிந்ததுபோல் பிரசங்க மாரிபெய்யும்
ஒருமொழிசால் பெருங்குரவ! நினதுதிரு அடி ஊழி ஊழி வாழி.

[இருமொழி—வடமொழி, தென்மொழி, பிரசங்கம் பொழிந்
தது—பிரசம் கம் பொழிந்தது : தேனை மேகம் பெய்தது].

இலகொளிசேர் தருபொய்யா மொழியாயும், நச்சினார்க்கினியனும்
நலமிளிரும் பொடியார்க்கு மேனியுடை அடியார்க்கு நல்லனும்,
பொலிவுறுநம்மொழிகள் சொலும் இலக்கணங்கள் தம்மில்இளம் பூரணனும்
அலகில் புகழ் படைத்தனை நீ விளங்குவதால் தமிழ்ப்புலவன் ஆவாய் அன்றோ?

[பொய்யாமொழி—சத்திய வாக்கினன்; வள்ளுவர். நச்சினார்க்
கினியன்—பக்தவத்ஸலன்; உச்சிமேற் புலவர்கொள் உரையா
சிரியர். பொடியார்க்கும்—விபூதி தரிக்கும். அடியார்க்கு நல்லார்
—தொண்டர்க்கு நலம்புரிவோன்; சிலப்பதிகார உரையாசிரியர்.
இலக்கணம்—லக்ஷணம்; வியாகரணம். இளம்பூரணன்—ஆண்
டிற் சிறியனாய் அறிவிற் சான்றவன்; தொல்காப்பியஉரையாசிரியன்.]

நேரான அத்வைதம் நிலைநாட்டிப் புகழ்வாய்ந்தோய்! நேரா ராம்,பல்
லோரும் 'ஷண்மதஸ்தா பகன்' என்னக்கொண்டாடும் உரிமை வாய்ந்தோய்.
ஏராரும் திருவானைக் காவிலெழுந் தருள் அகிலாண் டேச்வ ரிக்குச்
சீராரும் தாடங்கப் பிரதிட்டை செய்துளநின் சீர்த்தி வாழி!

[நேரார்—விரோதிகள். ஷண்மதம்-ஆறுமதங்கள்:]

ம. கோபாலகிருஷ்ணன்.

பிரமசரியம்.

இச்சரீரம் இருமைப் பயன்களும் அநுபவிப்பதற்குக் கடவுள் நமக்கு அருளிய கருவி. மானிட ஜன்மத்திற்குரிய கடமைகளைச் செய்யவும், கடவுள்படைத்த சிறந்த பொருள்களைக் கிரமமாக உப யோகித்து அநுபவிக்கவும், பிறர்க்குச் சுமையாயிராமல் இயன்ற உதவிபுரியவும் வேண்டுமாயின், அதனைத் தக்கவாறு போற்றித் தீர வேண்டியதேயாம். இங்ஙனம் போற்றலையே "பிரமசரியம்" என்பர். நானு நடை, உடை, நொடி, ஆகாரதிகளுக்கேற்பப் பிரமசரியத்திற்கு ஏற்றமுந் தாழ்வும் ஏற்படும். ஆதலால்,

தூய வாழ்க்கையடைய விரும்பும் ஒவ்வொருவனும், "நான் இதுவரை தவறாக நடந்திருப்பினும் அவற்றை இனிச்செய்யேன் உத்தம வாழ்க்கையையே கைக்கொள்வேன். மனப்பீடைக்குக் காரணமான இந்திரிய விஷயங்களை வெல்வேன்" என்று உறுதி செய்துகொண்டு அவ்வுறுதியை நிறைவேற்ற இயன்றவாறு முயன்றே தீரவேண்டும். இதுவே 'சங்கற்பம்' எனப்படும். நலமுற விரும்பு வோன் காலையும் மாலையும் ஈசுவரப் பிரார்த்தனை செய்துவரவேண் டும். இரவில் நித்திரை செய்யுமுன், ஒருவர், தாம் அந்தந்தத் தினத் தில் செய்த நன்மை தீமைகளை ஆராய்ந்து தெளிந்து, தீமைகளைக் குறைக்கவும் நன்மைகளை மிகுக்கவும் முயலவேண்டும்.

கண், மனோவிகாரங்களை அதிகப்படுத்தக்கூடிய காட்சிகளைக் காண்டல் கூடாது. காமுகர், பிறர்மனைவியரைப் 'பெற்றதாய், தங்கை தமைக்கை'களைப்போல் நினைத்து நோக்கின், அவர்கள் தாமே நாணி நல்வழிப்படுவர். மனத்தைக் கெடுக்கக்கூடிய நாடகங்களையும் காணத் தகாத நிலையிலுள்ள பிராணிகளின் அங்கங்களையும், சித்திரப்படங்களை யும் பார்க்கலாகாது. கெட்ட புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்து மகிழும் வழக்கத்தையும் முற்றும் நீக்கி விடுதல் வேண்டும்.

மூக்கையும் சரியாய் உபயோகிக்கவேண்டும். சுகந்த திரவியங் கள் காமவாசனையை நிச்சயமாய் அதிகரிக்கச்செய்யும். ஆதலின், அவற்றையும் உபயோகியாது நீக்கிவிடவேண்டும்.

கெட்ட வார்த்தைகளைக் கேட்காமல் செவியையும், துர்வசனங் களைப் பேசாமல் வாயையும், மெல்லிய பதார்த்தங்களை ஸ்பரிசியாமல் மெய்யையும் காத்தல் வேண்டும்.

ஆகாரத்திலும் அதிஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும். நம்முள் பெரும்பாலார் நாக்குருசியின் நிமித்தம் உண்கின்றார்களேயன்றி, சரீர ரக்ஷணையின் பொருட்டு உண்பதில்லை. உயிர் வாழ்க்கையின் உண்மை யறிந்து உண்பவர் சிலரே. உண்ணும் ஆகாரம் மிதமாய் இருத்தல்

வேண்டும். பசி அடக்கும்வரை உணவு கொள்ளல் போதுமானது. ஆகாரத்தில் சாத்விகம், ராஜஸம், தாமஸம் என்ற மூன்றுவகையுண்டு. சாத்விக ஆகாரத்தையே அங்கீகரித்தல் வேண்டும். மற்றவை தேகத்தைக் கெடுக்கும்; காமவிகாரத்தை உண்டுபண்ணும். இதன் பொருட்டே, மாமிசாதிகளையும், தாவரவர்க்கங்களில், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, 'காப்பி', 'டீ', புகையிலை, முதலியவற்றையும் விலக்கவேண்டுமென்கிறார்கள்.

ஆபாசத்தின் பொருட்டுச் சயனித்தல் வேண்டும். மாலைவேளைகளில் தேகாப்பியாசம் செய்து மிதமாக உண்டு, அதன்பின், இரண்டு மணிக்குப் பிறகு நித்திரை செய்தல்வேண்டும். உண்டவுடனே, படுத்துக்கொள்ளல் கூடாது. சீக்கிரம் படுத்துக்கொண்டால் தாது நஷ்டம் உண்டாகும். ரோகங்கள் உள்ளவர்கள் அதிகாலையில் எழுந்துவிடவேண்டிய தவசியம். பகலில் தூங்கிவிடக்கூடாது படுக்கும் படுக்கை கெட்டியாக இருத்தல் வேண்டும். மிருதுவான சயனத்தின் மீது படுப்பதும, முதுகு பாயிற்பட மல்லாந்து படுப்பதும் பிரமசரியத்திற்கு ஒவ்வாதன.

(இன்னும் வரும்.)

சே. ரா, கணபதி சுப்பிரமணிய ஐயர்,
தமிழ்ப்பண்டிதர், கொள்ளேகாலம்.

விடுகதை வினா

நாலெழுத்தால் ஆகுமொரு தேவி நாமம்:
கண்ணு மிதில் முதலெழுத்து 'மிகுதி' ஆகும்.
ஏதுமதில் முதல் மூன்று நான்கு சேரின்
ஏய்ந்த 'விடு தலை'. இரண்டை முறித்துக் காணும்
கால், அதின் முன் னெழுத்திரண்டும் 'உடு' வே ஆகும்;
'காவலர் செய் தொழில்' இரண்டு மூன்று நான்காம்.
ஞாலமெலாம் விளக்கிவரு ஞான தீப!
நச்சினார்க்கினிய! இதென்? நவிலுவாயே.

பண்டிதை—சிவகாமி சுந்தரியம்மாள்,
கொள்ளேகாலம்.

சமாசாரக் கொத்து.

கும்பகோணம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கர பகவத் பாதா சார்ய, ஸ்ரீசந்திரசேகரேந்திர சாஸ்வதி ஸ்வாமிகள், ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தினின்று, திருச்சி நாஷனல் காலேஜாரின் வேண்டுகோட்கிணங்கி, அங்கு, 27-3-26 சனிக்கிழமை அன்று, காலை 8½ மணிக்கு எழுந்தருளினர்கள். ஸ்வாமிகளுக்கு ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் காலேஜ் பண்டிதர்களாலும் மாணவர்களாலும் வரவேற்புப் பத்திரிகை வாசிக்கப்பட்டன. பிறகு ஸ்வாமிகளின் பாத பூஜை இனிது நிறைவேறியது. வாசிக்கப்பட்ட பத்திரிகைகளுக்கு விடை கூறுங்கால் ஸ்வாமிகள், 'வித்தை, நாஷனல் வித்யாசாலைச்சிறப்பு, சிரபுரநகர் மாட்சி, மாதுர்பூதேசுவரர் மகிமை, தற்கால மக்கள் நல்வழிப்படுதற்கான வகைகள்' முதலியவற்றைப்பற்றி உருக்குருகக் கல்லுருகக் கல்லாதார் உளமுருக உபதேச உபந்யாசம் புரிந்தருளினர்கள்.

நாஷனல் காலேஜில் வேலைக்கமர்ந்திருக்கும் ஆசிரியர்களும் பிற உத்யோகஸ்தர்களும் தம்மக்களை — அவர்கள் எத்தனை பேர்களேனும், எவ்வகுப்பிற் பயில்பவரேனும்— சம்பளமேயின்றிச் சேர்க்கலாம் என்று கருணைமிக்க அக் காலேஜ் போர்டார் தீர்மானித்துள்ள சுபசெய்தியைப் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

திருச்சிக்கு ஒரு மைல் தூரத்திலுள்ள பெரியத்தியூர் என்ற சின்னஞ்சிறு ஸ்டேஷனில் இம்மாதம் 23 ௳ செவ்வாயன்று திருடர் எண்மர் பெண்பிள்ளைகளைப் பயமுறுத்தி 800 ரூ. பெறுமான நகைகளைப் பறித்துச் சென்றனராம்.

இங்கிலாந்திலுள்ள தபாலாபீசுகளில் தபால் தலைகளின்மீது "பிரிடிஷ் சரக்குகளை வாங்குங்கள்" என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன."இந்தியாவிலுள்ளார்க்குச்சுதேசாபிமானம் உண்டாகுமாறு, கடிதங்களில் எல்லாம், 'இந்திய சரக்குகளை வாங்குங்கள்' என்று முத்திரை போடவேண்டு" மென்று ஒரு பிரமுகர், இப்பொழுது இந்தியராயுள்ள தபால் இலாகா டைரக்டர் ஜனரலுக்கு எழுதியிருக்கிறாராம்— முடிவு யாதாமோ?

இரண்டு வாரங்களுக்குமுன் ஸ்ரீரங்கத்தில் 25 வயதுள்ள வடதேசப் பிராமணன் ஸ்ரீரங்கநாதருக்கு அர்ச்சனை செய்வித்தவுடன் ஒரு கத்தியால் தன் கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டு மாண்டனன்.

பத்திராதிபர் குறிப்பு.

சென்ற மார்ச்ச-மீ சஞ்சிகை அதிவிரைவில் அச்சாகி முடிந்தும், சில காரணங்களால், பலர்க்குக் காலந் தாழ்த்து அனுப்ப நேர்ந்தமையின் அம்மாதத்திய ‘‘விடுவிப்பு வினாவிற்கு விடை’’ அனுப்புவோர் அதிற்கண்டுள்ளபடி பங்குனி-மீ 25க்கு மேலும், சித்திரை-மீ 10டக்குள் விடை அனுப்பலாம்.

சென்ற பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பத்திரிகைகளுடன் இம்மாதம், விவேகபோதினி, ஜனமித்திரன், The Indian Educator கற்பகம், ஹரிசமய திவாகரம், தஞ்சை மித்திரன், மகாவிகட தூதன் என்ற பத்திரிகைகளை நம் அன்பார்ந்த சகோதரர்களிடமிருந்து மாற்றுப் பத்திரிகைகளாகப் பெற்றோம்.

நமது நச்சினார்க்கினியனை மாற்றுப்பத்திரிகையாகத் தவறாமல் பெற்று வந்தவர்களும், வருகின்றவர்களுமான சகோதரப் பத்திராதிபர்கள் சிலர், தம் பத்திரிகைகளை எமக்கு இதுவரை அனுப்பாமைக்கு மறதியே காரணமென்று எண்ணுகிறோம். தோன்றி அதிவிரைவில் மறைந்தன சிலவும், நின்றே விட்டவை சிலவும் உள என்பதை யாம் அறிந்தும், அவை, இப்பொழுது மீண்டும் தோன்றியிருக்கக்கூடும் என்று எண்ணியே அவைகளுக்கும் இப்பொழுதும் அனுப்பி வருகிறோம். தம் பத்திரிகையை எமக்கு மாற்றுப் பத்திரிகையாக அனுப்பாதவர்க்கும் இனி இப்பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நம் மதிப்புரை கருதி அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் ஹரி ஹர பாரதிகள் அனுப்பி ‘பாண்டிய மன்னர் சரித்திரம்’ முதற்பாகம், ஷை இரண்டாம் பாகம், ‘தந்தாபரணம்’ ‘மகாவீர விஜயம்’ என்ற நான்கு நூல்களையும்; கோயம்புத்தூர் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பண்டிதர் அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் அனுப்பியுள்ள ‘‘நற்குண நாயகம்’’ என்ற தமிழ்நாவலும் வரப்பெற்றோம். இவற்றைப் பற்றிய மதிப்புரை பின்வரும்.

அன்பர்கள் நமக்கு அனுப்பும் கடிதங்கள் மாற்றுப் பத்திரிகைகள், விஷயங்கள், புஸ்தகங்கள் முதலியவற்றைத் தயைசெய்து எம் காலேஜ் விலாஸத்துக்கு எமக்கு அனுப்பாமலும், ‘‘திருச்சினாப்பள்ளி என்ற பெயர் போடாமலும் ‘‘நச்சினார்க்கினியன்’’ பத்திராதிபர் ‘‘நச்சினார்க்கினிய நிலயம்’’ தெப்பக்குளம் போஸ்ட்’’ என்றே விலாசமிட்டு அனுப்புமாறு வேண்டுகிறோம். சுமார் 3 மாதங்களுக்குக் காலேஜ் மூடப்பட்டுள்ளது. நாம் இருக்குமிடம் திருச்சியேயாயினும், அது தெப்பக்குளம் போஸ்டைச் சேர்ந்ததேயன்றித் ‘திருச்சி’ போஸ்ட் ஆபீசைச் சேர்ந்ததன்று. இதனைத் தயைசெய்து யாவரும் கவனிக்க.

முதற்கண் உள்ள ‘‘கடவுள் வணக்கப்பயன்’’ தனித் தமிழிலிருப்பது தமிழ் விருப்பினர்க்கு மகிழ்வு தருவதாம்.

விடுவிப்பு வினு

இனும்! இனும்!! இனும்!!!

ஒரு ரூபாய் அல்லது 1ரூ. 4 அணு விலையுள்ள

எமது பிரசுரங்கள்

மூன்றெழுத்து வார்தகையாக இரண்டு வார்த்தைகள் எழுத வேண்டியது. ஷை வார்த்தையிலுள்ள எழுத்துக்களைப் பிரித்து எழுதினுல் 2 எழுத்து வார்த்தையாக 3 வார்த்தைகளும்; 3எழுத்து வார்த்தையாக 1 வார்த்தையும் வரக்கூடியதா யிருக்கவேண்டும். ஒரு வார்த்தையிலிருந்து எழுதும் வார்த்தைகள் எவையோ, அவைகளே ஏறக்குறைய மறுவார்த்தையிலிருந்து எழுதும் வார்த்தைகளா யிருக்கவேண்டும்.

☞ 1. வார்த்தைகள் பெயர்ச் சொற்களாகவே இருக்க வேண்டும்.

2. விடை சித்திரை-மீ 20-வுக்குள் கிடைக்கவேண்டும்.

விடைகள்.

1.

2.

மகா-ா-ா-ஸ்ரீ "நச்சினர்க்கினியன்"பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

விடையில் தங்கள் தீர்ப்பே முடிவானதென்றும் சட்ட சம்பந்தமாய்ச் சொல்லத்தக்கதென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

பெயர்____________________

விலாஸம்____________________

தேதி____________________